**மின்சார வழங்கல் நம்பகமான முன்னேற்ற ஆதாரச் செயற்திட்டம் - 2018**

மின்சார வழங்கல் நம்பகமான முன்னேற்ற ஆதாரவுச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 9186- எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிற்கு இடையில் கைச்சாத்திட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வட மாகாணத்தில் சிறிய தனித் தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு என்பவற்றின் பயன்பாட்டிற்காக மின்சக்தி உற்பத்திக்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 288 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிர்வகிக்கப்படுகின்ற வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 180.72 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.26 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட அதேநேரம், இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 106.56 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.74 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான அவதானிப்புகளைக் கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 மார்ச் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2.2 சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்கடன் இணங்கமை**

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2019 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 யூன் 06 இலேயே சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | நிதிகளை மீளளிப்பு செய்வதில் தாமதங்களிற்கான சாத்தியம் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்**

செயற்திட்ட நடவடிக்கைகள் சிவில் வெலைகளுடன் தொடர்புபட்ட கடல் நீர் சேமிப்பு சுத்திகரிப்பு பொறி வழங்கி பொருத்துதல் மற்றும் குளிர்பாண தொழிற்காலை மற்றும் குளிரூட்டல் முறைமை போன்ற 02 கூறுகளை கொண்டுள்ளது. அதில் கடல் நீர் சேமிப்பு சுத்திகரிப்பு பொறி வழங்கி பொருத்துதலிற்கான ஒப்பந்தம் 2018 ஒக்தோபர் 15 இலேயே வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2018 யூன் 07 ஆந் திகதி கைச்சாத்திட்ட ஆலோசனை சேவைகளிற்கான உடன்படிக்கையின் நிபந்தனை குறிப்புரைகளின் பிரகாரம், ஆலோசனையாளர் நயினாதீவில் சிறிய நீர் உப்பகற்றல் பொறிக்கான குறிப்புரைகள் மற்றும் கெள்வி ஆவணங்களின் வடிவமைப்பு மற்றும் வரைபில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஆதரவளிப்பதற்கு பொறுப்பாக உள்ளார். எவ்வாறாயினும், 2018 யூன் 07 இல் ஆலோசனை சேவைகளிற்கான உடன்படிக்கை திகதிக்கு முன்னர் கடல் தண்ணீர் சேமிப்பு சுத்திகரிப்பு பொறி வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தம் மீதான கோள்விகள் 2018 மார்ச் 28 இல் கோரப்பட்டிருந்தது. | இங்கு உரிய ஆலோசனையாளரின் அனுபவங்களை பகிர்வதற்கும் வேலைகளை ஒருங்கிணைத்தலிற்கும் சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. | உரிய ஆலோசனையாளரின் அனுபவங்களை பகிர்வதற்கும் வேலைகளை ஒருங்கிணைத்தலிற்கும் சந்தர்ப்பங்கள் இருக்காத போதிலும் அவருடைய அனுபவம் கெள்வி முன் தகுதிகாணல் கூட்டத்திற்காக முன் மொழியப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு ஆலோசனையாளரின் அறிவு மற்றும் அநுபவத்தினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |